இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 10 | இதழ் : 38 | மே | 2024 | Vol.: 10 | Issue: 38 | May | 2024

முரவுவாய்க் குழிசி முரியடுப்பு muravuvāyk kuḻici muriyaṭuppu

கண்மணி கணேசன் ச. | Kanmani Ganesan S.[1ORCID]

[1] Former etired Principal & HOD in Tamil, Srikaliswari college, Sivakasi in Tamilnad. India. E mail: kanmanitamilskc@gmail.com, DOI: 10.5281/zenodo.11315674

ஆய்வுச்சுருக்கம் (Abstract)

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படையில் இடம்பெறும் "முரவுவாய்க் குழிசி முரியடுப்பு" என்ற தொடரின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். தொகைநூற் காலத் தமிழர் அடுப்பு மூட்டிய முறைகளில் புத்தொளி பாய்ச்ச வழிவகுக்கும் என்ற அளவில் இக்கட்டுரை சிறப்புப் பெறுகிறது. விளக்கமுறை ஆய்வாக அமையும் இக்கட்டுரைக்குக் குறிப்பிட்ட பாடல்தொடர் மட்டுமே முதன்மை ஆதாரம் ஆகச் சிலப்பதிகாரம், நிகண்டுகளும் அகராதிகளும் தரும் பொருள்கள், உரையாசிரியர் தரும் கருத்துகள், வலைத்தளக் காணொளிகள் காட்டும் இன்றைய நடைமுறைகள் ஆகியன இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகின்றன. திறவையான குழியின் நடுவில் அடுகலனை வைத்துச் சுற்றிலும் மேலும் கீழும் சுள்ளிகளை அடுக்கி எரிபொருளாக்கிச் சமைப்பது முரவுவாய்க் குழிசி முரியடுப்பு என்று தெரிகிறது.

The aim of this article is to draw a clear picture about the phrase "*muravuvāyk kuḻici muriyaṭuppu*" in *perumpaanaarruppadai*; one among the ten idylls. The significance of the study is that it throws some light on the practice of the early Tamils preparing a furnace for cooking. The same phrase alone forms the primary source for the descriptive study. The secondary sources are the other hymns of the anthologies, *Cilappatikaram*, meanings given in *nikandukal and dictionaries*, views of the commentators and current practices as shown in the U-tube videos. It is found that people cooked food in an open pit placing the cooking pot in the middle surrounded on all sides; up and down by twigs as the source of fire.

திறவுச்சொற்கள் (Keywords): குழிசி, முரியடுப்பு, முரவுவாய், முரி, முரிந்த அடுப்பு, விளிம்பு உடைந்த பானை

முகவுரை

"முரவுவாய்க் குழிசி முரியடுப்பு" என்ற பாடல் தொடரைத் தெளிவுபட விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். தமிழக வரலாற்று ஏடுகளில் இடம்பெறும் தொகைநூற் காலச் சமூகத்தின் வாழ்வியல் பழக்கங்களை முழுமையாக அறிய; பண்பாட்டுக் கூறுகளைப் பல கோணங்களில் கண்டு விளக்கும் முயற்சியின் ஒரு கூறாக இவ்ஆய்வு அமைகிறது. விளக்க முறையில் அமையும் இக்கட்டுரைக்குக் குறிப்பிட்ட பாடல் தொடரே முதன்மை ஆதாரம் ஆகும். இரண்டாம்நிலைத் தரவுகளாகத் தொகைநூல்கள், சிலப்பதிகாரம், அகராதியும் நிகண்டும், உரையாசிரியர் விளக்கங்கள், இன்றைய நடைமுறைகள் ஆகியன அமைகின்றன.

முரி அடுப்புப் பயன்பாடு

எயினர் தாம் தோண்டிய குழியில் சுள்ளிகளைத் திறம்பட நிரப்பி அடுப்பு ஆக்கினர். கரம்பை நிலத்தைப் பாரைகளால் தோண்டிப்; புல்லரிசியை வாரி; ஆழ்ந்த கிணற்றில் அரிதில் தோண்டிக் கிடைத்த ஊற்றில் இருந்து உவர்நீரை எடுத்து; உலையாக ஊற்றி; பார்வை மானால் கையகப்படுத்திய ஆண்மானின் பதப்படுத்திய ஊனைப் புல்லரிசியோடு ஒருசேர அடுகலனில் பெய்து; குழியின் நடுவில் சுள்ளிகட்கு இடையில் வைத்துச்; சுள்ளிகளைப் பரப்பி மூடிச் சமைத்தனர் (பெரு.அ.94-100).

குறவர் மான்கறி வேக வைத்த புலால் நாறும் பானையைப் புறத்தே கழுவாமல் அடுப்பில் ஏற்றிச் சமைத்தனர் (புறம்.168); ஏன் எனில் அது முரிஅடுப்புச் சமையல் என உய்த்து உணர முடிகிறது. அடுத்தடுத்து முரிஅடுப்பில் ஏற்றிய பானை தவிர்க்க இயலாது கரிப் பிடித்து இருப்பதும்; அதைப் புறத்தே கழுவிப் பயன் இல்லை என்பதும் வெளிப்படை.

'முரவுவாய்க் குழிசி'

பொ.வே.சோமசுந்தரனார் 'முரவுவாய்க் குழிசி'யை விளிம்பு உடைந்த பானை என்கிறார் (பத்துப்பாட்டு தொகுதி-I, பெரும்பாணாற்றுப்படை, ப.71-74). ஔவை சு.துரைசாமிப் பிள்ளை "முரவுவாய்... குழிசி" (புறம்.371) 'சிதைந்த விளிம்புடைய பானை' என உரை கூறுகிறார் (புறநானூறு பகுதி II- ப.355).

உரையாசிரியர்கள் கூற்றுடன் நடைமுறை உண்மை முரண்படுகிறது. விளிம்பு உடைந்த பானையில் தானியங்களை வேக வைக்கும் போது; கொதிநிலை அடைந்தவுடன் உலைநீரோடு வேகும் தானியமும் சேர்ந்து சிந்தும். கொதி அடங்கி; சோறு பொருந்தி வேகும்போது உலைமூடி இட்டாலும் நீராவி வெளியேறும். மொத்தத்தில் விளிம்பு உடைந்த மட்பாண்டத்தில் சரிவரச் சமைக்க இயலாது.

'முரவுவாய்' என்ற அடை பிற பெயர்களோடும் சேர்ந்து வருகிறது. 'முரவுவாய்ப் புற்றம்' (அகம்.72), 'முரவுவாய் முதுபுள்' (அகம்.260), 'முரவுவாய் ஞாயில் ஓரெயில்' (அகம்.373) எனப் பாடல்களில் பயில்வதைக் காண்கிறோம். ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் ரா.வேங்கடாசலம் பிள்ளையும் சேர்ந்து எழுதிய உரையில் மேற்சுட்டிய மூன்று சொற்றொடர்களில் உள்ள 'முரவுவாய்' எனும் சீருக்கு உரைக்கும் பொருள்களாவன;

> 'முரவுவாய்ப் புற்றம்' = முரிந்த இடத்தை உடைய புற்றம் (அகநானூறு களிற்றியானை நிரை- ப.191);
> 'முரவுவாய் முதுபுள்' = முழங்கும் வாயை உடைய பேராந்தை (அகநானூறு மணிமிடை பவளம்- ப.331);
> 'முரவுவாய் ஞாயில்' = முறிதல் பொருந்திய சூட்டினை உடைய மதில் (அகநானூறு நித்திலக்கோவை ப.162)

என்பதாம். இப்பொருட்கள் தம்முள் முரண்படக் காண்கிறோம். ஆயின் முதுபுள்ளாகிய கிழட்டுப் பேராந்தை, புற்றின் வாய், ஓரெயிலின் ஞாயில் ஆகியவற்றின் வாயோடு முரவுவாய்க் குழிசியின் வாய் ஒத்த தோற்றம் கொண்டு இருப்பதைப் படங்கள் வாயிலாகவும் விளக்கம் மூலமாகவும் எடுத்துக் காட்ட இயல்கிறது.

வயோதிகம் காரணமாக எப்போதும் திறந்தே இருக்கும் ஆந்தையின் வாய் 'முரவுவாய்' என்ற சொற்றொடரின் பொருளைத் தெளிவாக்குகிறது (படம்-1). மூடாது பிளந்தே கிடக்கும் வாய் கிழட்டுத் தன்மையின் அடையாளம் ஆகும்.



படம்:1- முரவுவாய் முதுபுள்

புற்றின் வாயில்கள் அனைத்தும் எப்போதும் திறந்தே காணப்படும் (பார்க்க: படம்-2); மூடி இருப்பதில்லை.



படம் 2- முரவுவாய்ப் புற்றம்

குறுநில மன்னரின் மாளிகையைச் சூழ்ந்து இருக்கும் ஓரெயிலின் ஞாயில் சுற்றுச்சுவரை மட்டுமே உடையது. அதில் வேந்தரின் கோட்டையில் இருந்தது போல்; போர் செய்தற்கு உரிய கொத்தளங்களோ; இயந்திரங்களை வைப்பதற்கு உட்கோட்டைச் சுவருடன் கூடிய தளமோ இரா. தூரத்தில் வரும் எதிரிகளை நோட்டமிட இடுக்குகளோ, அம்புகளை வைத்துக் குறிபார்க்கும் துவாரங்களோ இருக்காது. மதுரைக் கோட்டை படைப்புரிசையுடன் கூடிய வேந்தர் கோட்டைக்குத் தக்க சான்று ஆகிறது (மதுரைக்காஞ்சி அ.351-356 & சிலப்பதிகாரம்-அடைக்கலக் காதை- அ.207-218). இவை ஏதும் அற்ற ஓரெயிலை மேலிருந்து பருந்துப் பார்வையாகப் பார்க்கும்போது முற்றிலும் திறந்த நிலையிலேயே காணப்படும். அதனால்தான் 'முரவுவாய்' என்ற அடைமொழி குறுநில மன்னரின் ஞாயிலுக்கு உரித்தானது. இக்கருத்தை உறுதி செய்வதற்கு ஏற்ப; 'பருந்து உயிர்த்து மதிலில் அமர்ந்திருக்கக்; குறுநில மன்னருக்காகப் போர்செய்த வீரர் பகைவர்க்கு மயக்கம் தரும் பாதைகளில் எதிரிகளை மடக்கினர்' (புறம்.354). படைப் புரிசை இல்லாமையால் ஊர்த்தெருக்களில் போர் நிகழ்ந்தது என உரைக்க இயல்கிறது. எனவே 'முரவுவாய்' என்னும் பெயரடை 'மூடாத' எனப் பொருள்படுகிறது. 'குழிசி' இடம் நோக்கிப் பானை, குழி என இரு பொருள் படும்.

> "பறையொடு தகைத்த கலப் பையென் முரவு வாய்
> ஆடுறு குழிசி பாடு இன்று தூக்கி" (புறம்.371)

என்ற அடிகட்குப் 'பறையுடன் பிற இசைக்கருவிகளைக் கட்டிய பை என்பதால்; பாதுகாப்பாக எடுத்துச்செல்ல ஏதுவாக அடுகலனாகிய பானையைத் தூக்கியதாக' ஔவை சு.துரைசாமிப் பிள்ளை பொருள் கூறுகிறார். பின்னரும்;

“முரவுவாய்... குழிசி” = ‘விளிம்பு உடைந்த பானை’

எனக் கூறுவது பட்டறிவின் பாற்பட்ட பொருள் இல்லை. எனவே புறப்பாடல் சுட்டும் ‘முரவுவாய்... குழிசி’ திறந்த நிலையில் இருக்கும் குழிசியே ஆகும். குழியைக் 'குழிசி' என்று அழைப்பது வட்டார வழக்கு என்பது களஆய்வில் திரட்டிய செய்தி. வண்டிச் சக்கரத்தின் ஆரக்கால்கள் கும்பத்தின் அச்சில் தோண்டிய குழிகளில் பொருந்தி இருக்கும். கொங்கு வட்டாரத்தில் கும்பம்; குழிசி எனும் மாற்றுப் பெயர் பெறுவதால்; குழிசி = தோண்டிய குழி; எனப் பொருள்படுகிறது.

சூடாமணி நிகண்டு 'குழி = கிணறு, வாவி' என்ற பொருள்களைத் தருகிறது. கிணறும் வாவியும் தோண்டப் படுபவை (ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.), தமிழ் நிகண்டுகள் தொகுதி-1 சூடாமணி நிகண்டு, ப.224). இதனால் 'முரவுவாய்க் குழிசி' முரிஅடுப்பு மூட்டத் தோண்டிய குழி என்பது உறுதி ஆகிறது (பார்க்க: படம்-3).



படம் 3- முரவுவாய்க் குழிசி

சமைப்பதற்குரிய பானை 'களிபடு குழிசி' (அகம்.393); 'அடல்... குழிசி' (புறம்.393) என்றெல்லாம் விதந்து பேசப்படுவதாலும் பெரும்பாணாற்றுப்படையின் 'முரவுவாய்க் குழிசி' திறந்தநிலைக் குழியே என்பது தேற்றம்.

முரிஅடுப்பு

பொ.வே.சோமசுந்தரனார் முரிஅடுப்பு என்ற சொற்றொடரை வினைத்தொகையாகக் கொண்டு 'முரிந்த அடுப்பு' என்கிறார் (மேற்.). முரிந்த அடுப்பில் சமைப்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. ஏனெனில் சமைக்கும்போது அவ்அடுப்பு சிதைந்துவிடும் வாய்ப்பு உளது. அத்துடன் முரிந்த அடுப்பில் சமைப்பது குடும்பத்திற்குக் கேடு விளைக்கும் என்ற நம்பிக்கை அடிப்படையிலான நாட்டார் வழக்காறும் உளது.

சுள்ளிக்கட்டு கிடக்கும் முற்றம் 'முரிவாய் முற்றம்' என்றே பாடல் பெறுகிறது (புறம்.261). மல்லிகிழான் காரியாதி இயற்கை எய்திய உடன்; இடையறாது விருந்தினரைப் புறந்தந்த அவனது வீட்டுமுற்றத்தில் விருந்து தயாராகவில்லை ஆதலால்; எரிக்கப்படாத சுள்ளிக்கட்டு நீர் வறண்ட ஆற்றில் நின்ற ஓடம் போல் காணப்பட்டது எனப் பாடல் பெறுகிறது.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 'முரிவாய்' என்பதை வினைத்தொகையாகக் கொண்டு; 'முரிந்த குறட்டை உடைய முற்றம்' எனப் பொருள் உரைக்கிறார் (புறநானூறு-பகுதி-II, 2007, ப.128). பழைய உரையாசிரியரும் 'வாயென்றது குறடு; அது பலரும் சார்தலால் தேய்ந்து முறிந்து கொண்டு முரிவாய் முற்றம் எனப்பட்டது' என்கிறார் (முன்னது-ப.129).

'முரி' என்பதற்கு அகராதி 'வளைத்து ஒடித்தல்/ வெட்டி முரித்தல்/ துண்டாக்கல்' எனப் பொருள் தருகிறது (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, ப.282). எனவே முரி அடுப்பு 'ஒடித்த சுள்ளிகளால் ஆன அடுப்பு' என மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகப் பொருள் கொள்ளலாம்.

பாரம்பரியச் சமையல் பற்றிய காணொளிகள் சுள்ளிகளை அடுப்பாக்கி எரிக்கும் முரிஅடுப்பைக் காட்டுகின்றன (பார்க்க:

🔥மண்பானையில் 🍯🍗சிக்கன் செய்யலாம் வாங்க🔥#chicken #trending #trendingvideo #shorts - YouTube ; https://youtu.be/bjiLDiEJARQ) எனவே தோண்டிய திறந்தநிலைக் குழியில் அடுகலனை வைத்துச் சுள்ளிகளால் சூழ மூடி எரிப்பதே 'குழிசி முரிஅடுப்பு' எனல் உறுதி.

முடிவுரை

பண்டைய தமிழகத்தில் திறந்தநிலைக் குழியில் சுள்ளிகளைப் போட்டு அவற்றின் இடையில் அடுகலனை வைத்துப் பின் மேலே சுள்ளிகளால் நிரப்பி நெருப்பு மூட்டி அடும் முரவுவாய்க் குழிசி முரிஅடுப்பைப் பயன்படுத்தினர்.

துணைநூற்பட்டியல்

1. *Akanaanooru kalirriyaanai nirai,* (2009), *kazhaka veliyeedu, chennai.*
2. *Akanaanooru manimidai pavalam,* (2007). *kazhaka veliyeedu, chennai.*
3. *Akanaanooru niththilakkovai,* (2008), *kazhaka veliyeedu, Chennai.*
4. *Chilappathikaaram*, (1975). *Kazhaka veliyeedu*, Chennai.
5. *Chenthamizhch Chorpirappiyal Perakaramuthali-* volume VII - part II, (2007). *Chenthamizhch chorpirappiyal akaramuthalith thitta iyakkaka veliyeedu*, Chennai.
6. *Paththuppaattu* part i, (2007), *kazhaka veliyeedu, Chennai.*
7. *Paththuppaattu* part ii, (2008), *kazhaka veliyeedu, Chennai.*
8. *puranaanooru-* part- i&ii (2007). *kazhaka veliyeedu, chennai*
9. *Subramanyam Sa.Ve.* (ed.), Tamil *Nikandukal-* part-I, (2013). *Meyyappan*
10. *pathippakam*, Chidambaram.
11. 🔥மண்பானையில் 🍯🍗சிக்கன் செய்யலாம் வாங்க🔥#chicken #trending #trendingvideo #shorts - YouTube ; https://youtu.be/bjiLDiEJARQ)